## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் – ⑩

# இன்னுயிர்த் தமிழை எந்நாளும் காப்போம்!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

**தாய்மொழியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, தமிழ்நாடு போட்டுத் தந்த பாதையையே பல மாநிலங்களும் பின்பற்றுகின்றன. இந்தி ஆதிக்கத்திலிருந்து இந்திய மொழிகளைக் காத்து நிற்பது திராவிட இயக்கத்தின் மொழிக் கொள்கைதான்.**

**இந்தி பேசும் மாநிலங்களில் எத்தனை பேர் மும்மொழிப் பாடத்திட்டத்தில் பயின்று வருகின்றனர்? அவர்கள் படிக்கின்ற மூன்றாவது மொழி எது? இந்தியைத் தவிர இரண்டாவதாக ஒரு மொழியை சரிவரக் கற்றுத்தரும் கல்வி நிறுவனங்கள் எத்தனை உள்ளன?** இந்தக் கேள்விகளுக்கு நேர்மையான பதிலையும், உண்மையான புள்ளி விவரங்களையும் அளித்துவிட்டு, தமிழ்நாட்டில் மூன்றாவது மொழித் திணிப்புக்கான நியாயமான காரணத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்லட்டும்.

மூன்றாவது மொழி என்ற சுமையை ஏற்றாமல் தமிழ்நாட்டு மாணவர்களுக்குத் தரமான கல்வியை அளித்து வருகிறது திராவிட மாடல் அரசு. கால் நூற்றாண்டுக்கு முன்பே அரசுப் பள்ளிகளில் கணினி வகுப்புகள் தொடங்கப்பட்டன. தற்போது அரசுப் பள்ளி மாணவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டு உலகநாடுகளுக்குப் பயணிக்கிறார்கள். அறிவியல் தொழில்நுட்பத்தை அறிந்துகொண்டு அதனைக் கையாள்கிறார்கள். விளையாட்டுத் துறையில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்துகிறார்கள். கலை – இலக்கியம் சார்ந்த பங்களிப்பினைச் செய்கிறார்கள். பன்முக ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்கிறார்கள். அதனால் உயர்கல்வி வாய்ப்புகளைப் பெற்று, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர் பொறுப்புகளைப் பெற்று தமிழ்நாட்டுக்கும் இந்திய ஒன்றியத்திற்கும் பெருமைச் சேர்க்கிறார்கள்.

தமிழ்நாட்டு மாணவர்களின் பெருமை மீது பொறாமை கொண்டுதான் பா.ஜ.க. வஞ்சிக்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. ஏறத்தாழ 60 ஆண்டுகளாக இருமொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தமிழ்நாட்டின் மாணவர்கள் எந்தளவில் கல்வித்தரத்தில் பிற மாநிலத்தவருக்கு குறைவாக இருக்கிறார்கள்? உயர்கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் எந்த மாநிலத்தைவிட பின்தங்கியிருக்கிறார்கள்?

இதே வாதங்களை இந்தியா முழுவதும் அறியப்பட்ட ஆங்கில சேனலின் நெறியாளரிடம் இருமொழிக் கொள்கையில் படித்து உலக நாடுகள் எல்லாம் தன் திறமையை நிரூபித்து வரும் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் என் அன்பிற்குரிய பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வைத்தார்.

> **★ ஒன்றிய பா.ஜ.க. அரசுதான் மாநில உரிமைகளை மதிக்காமல், தமிழ்நாட்டுக்கு கல்வி நிதியைத் தரமாட்டோம் என வீண் பிடிவாதம் பிடிக்கிறது.**
>
> **★ பா.ஜ.க. அரசுதான் தமிழ்நாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள், அவர்தம் குடும்பத்தினர் வயிற்றில் அடிக்கின்ற படுபாதகச் செயலை செய்திருக்கிறது.**
>
> **★ ஒன்றிய பா.ஜ.க. அரசு அந்த அரசியல் சட்டத்தையே சிதைக்கின்ற வேலையை செய்கிறது.**
>
> **★ தி.மு.க. எந்த மொழிக்கும் எதிரியல்ல - வலிந்து திணிக்கப்படும் மொழிகளை மட்டுமே எதிர்க்கும்**
>
> **★ பிறமொழி ஆதிக்கத்திலிருந்து தாய்மொழியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, தமிழ்நாடு போட்டுத் தந்த பாதையையே பல மாநிலங்களும் பின்பற்றுகின்றன.**
>
> **★ தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளையும் இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக்கிட வேண்டும்.**

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியையும் திறன் மேம்பாட்டையும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அறிக்கைகளே பாராட்டுகின்றன. இதன்பிறகும், மூன்றாவது மொழியைத் தமிழ்நாட்டின் மீது திணிக்க முயற்சிப்பதும், இந்த வல்லாதிக்கப் போக்கை ஏற்க மறுத்தால் நிதி தர முடியாது என மறுப்பதும் தமிழர்கள் மீது பா.ஜ.க. அரசு திட்டமிட்டு நடத்துகின்ற தாக்குதலாகும்.

இத்தகைய தாக்குதல்களை எதிர்கொண்டு, ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களைத் தமிழ்நாட்டு மக்களிடம் முழுமையாக அம்பலப்படுத்தும் வலிமை கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம். ஆதிக்க மொழித் திணிப்பை எதிர்த்து, அன்னைத் தமிழைக் காத்திட சூளுரைத்துள்ள தி.மு.க.வுடன் தோழமைக் கட்சியினர் முழுமையாக இணைந்து நிற்கின்றனர். அரசியல் களத்தில் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்ட பல கட்சிகளும் மும்மொழித் திட்டத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றன.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் அந்தக் கட்சிகள் அனைத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழையும் பிற மாநிலத்தவர்களின் தாய்மொழியையும் மதிக்காமல் இழிவுபடுத்தும் நோக்கத்துடன் மொழித் திணிப்பை வலியுறுத்தும் மக்கள்விரோத மனப்பான்மையுடன் செயல்படும் ஒரே கட்சியாக பா.ஜ.க. இருக்கிறது.

தி.மு.க.வைப் பொறுத்தவரை நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் வகுத்து தந்த ஐம்பெரும் முழக்கங்களின் வழிநின்று உரிமைக் குரலை எழுப்புகிறது. அண்ணா வழியில் அயராது உழைத்து, ஆதிக்கமற்ற சமுதாயம் அமைந்திட வேண்டுமென்றால், இந்தித் திணிப்பை என்றும் எதிர்த்து நிற்போம். தாய்மொழியைக் காத்திடும் அந்த அறப் போரில் வன்முறை தவிர்ப்போம். வளமும் வளர்ச்சியும் இணைந்திட வறுமையை வெல்வோம். உரிமைகளை நிலைநிறுத்திடும் வகையில், மாநிலத்தில் சுயாட்சி – மத்தியில் கூட்டாட்சி என்ற நிலையை அடைந்திட பாடுபடுவோம்.

இந்தியாவின் மூத்த மொழி என ஆய்வுகள் மூலமாகவும் அறிவியல்பூர்வமாகவும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கின்றது நம் தமிழ் மொழி. இந்திய அரசின் செம்மொழித் தகுதி பெற்ற முதல் மொழி என்ற பெருமையைத் தமிழுக்குப் பெற்றுத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். 14 வயதிலேயே தமிழ்க் கொடிப் பிடித்து இந்தி ஆதிக்கத்தை எதிர்த்தவரும், தமிழ் மொழி காத்திட, உயிருக்கு அஞ்சாமல் தண்டவாளத்தில் தலை வைத்து ரயிலை மறித்தவருமான நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள்,"செம்மொழித் தமிழை இந்திய ஒன்றிய அரசின் ஆட்சி மொழியாக்கிடுக" என்று முழங்கியவர்.

தமிழுக்காக மட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள 22 மொழிகளையும்ஒன்றிய அரசின்ஆட்சிமொழியாக்கிட குரல் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அத்தனை மொழிகளையும் ஒரே நேரத்தில் ஆட்சிமொழியாக்குவதில் நிர்வாகச் சிக்கல் ஏற்படுமென்றால், எல்லாத் தகுதிகளையும் பெற்ற மூத்த மொழியான தமிழை உடனடியாக ஆட்சிமொழியாக்கிட வலியுறுத்தினார்.

அறிவியல் முன்னேற்றத்தினாலும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் நிர்வாகச் சிக்கல்களை இன்றையச் சூழலில் எளிதாகக் களைந்துவிட முடியுமென்பதால், தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளையும் இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக்கிட வேண்டும் என்பதே தி.மு.க.வின் கொள்கையாகும். ஒவ்வொரு மாநிலத்தின் மீதும் ஆதிக்க மொழித் திணிப்பை நடத்தாமல், ஒவ்வொரு மாநில மொழியையும் இந்திய ஒன்றிய அரசின் ஆட்சிமொழியாக அறிவிப்பதே சமத்துவமிக்க ஜனநாயக முறையாகும். மொழி சமத்துவத்தின் முதன்மைக் குரலாக தி.மு.க. ஒலிக்கும்.

மாநில உரிமைகளைப் பறிப்பதையே மறைமுகக் கொள்கைத் திட்டமாக கொண்டுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசு, தொகுதி மறுசீரமைப்பின் மூலமாக தென்னிந்திய மாநிலங்களின் நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைத்திடத் திட்டமிட்டுள்ள நிலையில், அதற்கு எதிரான முதல் முழக்கத்தை எழுப்பியிருக்கிறது திராவிட மாடல் அரசு.

இது தனிப்பட்ட தி.மு.க.வின் பிரச்சினையல்ல என்பதால் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்து, கூட்டத்தில் பங்கேற்ற கட்சித் தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்று, தமிழ்நாட்டின் உரிமையைத் தக்க வைக்கவும், தென்மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கையைப் பாதுகாத்திடவும் முதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம், மாநில உரிமைக் குரலை நசுக்கிவிட நினைக்கும் பா.ஜ.க.வின் நோக்கத்தை முறியடிக்கும் வகையில், மக்கள் திரள் போராட்டங்களை நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டாலும் அதையும் தி.மு. கழகம் முன்னெடுக்கும். அதில் அரசியல் எல்லைகளைக் கடந்து அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைக்கும்.

நாடாளுமன்றத் தொகுதிக் குறைப்பு – ஆதிக்க மொழித் திணிப்பு எனும் இரண்டு அபாயங்களை ஒருசேர செயல்படுத்தி, மாநில உரிமைகளைப் பறிக்க முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் சர்வாதிகாரப் போக்கிற்கு எதிரான அறவழிப் போராட்டம் எதுவாக இருந்தாலும் அதில் உடன்பிறப்புகளுடன், உங்களில் ஒருவனான நான் முதல் ஆளாக நிற்பேன்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம். இன்னுயிர்த் தமிழை எந்நாளும் காப்போம்.

**(கடிதத் தொடர் நிறைவடைகிறது. களத்தில் நம் பணி தொடரும்.)**

**அன்புடன்**

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 22
06.03.2025

---

### திருவள்ளூர் பதிவு மாவட்டத்தில் இணை சார்பதிவாளர் அலுவலகம்!

# ரூ.22.36 கோடியில் 12 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மார்ச் 7 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.3.2025) தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் திருவள்ளூர் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் மற்றும் பதிவுத்துறையில் மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் 22 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

பதிவுத்துறை வாயிலாக மக்கள் தங்கள் சொத்துக்களின் மீதான உரிமையை தமது பெயரில் பதிவு செய்தல், திருமணத்தைப் பதிவு செய்தல், சங்கங்கள், சீட்டுகள் மற்றும் கூட்டாண்மை நிறுவனம் போன்ற குழுவாகக் கூடி செயல்படும் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பதிவுத்துறை செயல்பாடுகளை மேலும் மேம்படுத்தும் வகையில் புதிய சார்பதிவாளர் அலுவலகங்களை கட்டுதல், காலிப்பணியிடங்களை நிரப்புதல், புதிய சார்பதிவாளர் அலுவலகங்களை ஏற்படுத்துதல், துறையின் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

**திருவள்ளூர் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம்**

2024 - 2025 ஆம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, திருவள்ளூர் வருவாய் மாவட்டம், திருவள்ளூர் மற்றும் ஊத்துக்கோட்டை வட்டங்களில் அமையும் திருவள்ளூர் பதிவு மாவட்டம் 1 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 82 கிராமங்களில் 36 கிராமங்களைப் பிரித்து, பிரிக்கப்பட்ட அந்த 36 கிராமங்களை உள்ளடக்கி திருவள்ளூர் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

புதியதாக உருவாக்கப்பட்ட திருவள்ளூர் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் சராசரியாக ஆண்டொன்றிற்கு 10,000க்கும் மேற்பட்ட ஆவணங்கள் பதிவாகி ஏறத்தாழ 53 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்புதிய சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்படுவதன் மூலம் அப்பகுதியைச் சார்ந்த பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை அளிக்க இயலும்.

**மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள 12 புதிய சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்**

2021 - 2022 மற்றும் 2022 - 2023 ஆகிய ஆண்டுகளுக்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறையின் முத்திரைத்தாள் மற்றும் பத்திரப்பதிவு மானியக் கோரிக்கையில், அதிக அளவில் வருவாய் ஈட்டித் தரும் பதிவுத் துறையில் மிகவும் பழுதடைந்த கட்டடங்களில் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் வாடகை கட்டடங்களில் இயங்கிவரும் சார்பதிவாளர் அலுவலகங்கள், பொதுமக்களின் நலன் கருதி மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கூடிய சொந்த அரசு கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை, பதிவுத்துறையில் 60 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் 31 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, தற்போது தஞ்சாவூர் மாவட்டம் - ஒரத்தநாடு, திருவாரூர் மாவட்டம் - திருத்துறைப்பூண்டி மற்றும் வலங்கைமான், மதுரை மாவட்டம் - திருமங்கலம், காஞ்சிபுரம் மாவட்டம் - ஸ்ரீபெரும்புதூர், திருப்பூர் மாவட்டம் - தாராபுரம், தூத்துக்குடி மாவட்டம் - எட்டையாபுரம், சாத்தான்குளம் மற்றும் ஸ்ரீவைகுண்டம், விருதுநகர் மாவட்டம் - இராஜபாளையம், புதுக்கோட்டை மாவட்டம் - விராலிமலை, கரூர் மாவட்டம் - குளித்தலை ஆகிய இடங்களில் 22.36 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வணிகவரி மற்றும் பதிவுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

### கழகத் தலைவர் – முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

# கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகள் - பொதுக் கூட்டங்கள்!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

கிருஷ்ணகிரி, மார்ச் 7 –

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிவிப்பு வருமாறு:–

மார்ச் 1 அன்று கழகத் தலைவர் – முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இம்மாதம் முழுவதும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் முழுவதும் வார்டு, கிளைகள் தோறும் கழக கொடி ஏற்றி இனிப்பு அறுசுவை உணவு வழங்குதல், பொது கூட்டங்கள், நலத்திட்டங்கள், மருத்துவ முகாம், விளையாட்டு போட்டிகள், மரக்கன்று நடுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

**பொதுக் கூட்டங்கள்!**

07.03.2025 வெள்ளிக்கிழமை – அஞ்செட்டி ஒன்றியம் சார்பாக (அஞ்செட்டி பேருந்து நிலையத்தில் பொது கூட்டம் – ராஜா (எ) தணிகாசலம் ஒன்றியக் கழகச் செயலாளர் தலைமையில் கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் பெருநற்கிள்ளி சிறப்புரை.

08.03.2025 சனிக்கிழமை – தளி தெற்கு ஒன்றியம் சார்பாக பல்லஹள்ளியில் ஆர். திவாகர் ஒன்றிய கழகச் செயலாளர் தலைமையில் கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி சிறப்புரை.

09.03.2025 ஞாயிற்றுக்கிழமை – ஒசூர் மாநகரம் சார்பாக ராம் நகர் அண்ணா சிலை அருகில் மேயர் மாநகரக் கழகச் செயலாளர் சத்யா தலைமையில் கழக மாணவரணி தலைவர் ராஜிவ் காந்தி, வழக்கறிஞர் மதிவதனி ஆகியோர் சிறப்புரை. 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை – கெலமங்கலம் மேற்கு ஒன்றியம், தேன்கனிக்கோட்டை பேரூர், கெலமங்கலம் பேரூர் சார்பாக தேன்கனிக்



கோட்டை பேருந்து நிலையத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் ஸ்ரீதர், பேரூர்க் கழகச் செயலாளர் டி.ஆர். சீனிவாசன், பேரூர்க் கழகச் செயலாளர் தஸ்தகீர் ஆகியோர் தலைமையில் கழக மாணவரணி தலைவர் ராஜிவ் காந்தி சிறப்புரை.

10.03.2025 திங்கட்கிழமை – சூளகிரி வடக்கு ஒன்றியம் சார்பாக பேரிகை பேருந்து நிலையத்தில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் நாகேஷ் தலைமையில் கழக செய்தி தொடர்பு இணை செயலாளர் தமிழன் பிரசன்னா சிறப்புரை.

11.03.2025 செவ்வாய்கிழமை – ஒசூர் ஒன்றியம் சார்பாக பாகலூர் பேருந்து நிலையத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் கஜேந்திரமூர்த்தி தலைமையில் செய்தி தொடர்பு செயலாளர் பேரா. ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சிறப்புரை.

22.03.2025 சனிக்கிழமை – தளி வடக்கு ஒன்றியம் சார்பில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சீனிவாசல ரெட்டி தலைமையில் மாநில மாணவரணிச் செயலாளர் எழிலரசன் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரை.

23.3.2025 ஞாயிற்றுக்கிழமை – சூளகிரி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பாக்யராஜ் தலைமையில் வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் பரந்தாமன் எம். எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

எனவே பொதுகூட்டங்கள் மற்றும் அனைத்து நிகழ்ச்சிகளிலும்

மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, மாநகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாநில, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் இந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தும், இந்நிகழ்ச்சிகளில் திரளாக கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




சிவகங்கையில் மாவட்ட மின்சார வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக முதல்வர் – கழகத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு தொ.மு.ச. கொடியினை மாவட்ட தொ.மு.ச. செயலாளர் சே.முருகேசன் தலைமையில் மாவட்ட திட்டக்குழுத் தலைவர் பெ.ராமமூர்த்தி ஏற்றி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பொருளாளர் சரவணகுமார், திட்ட துணைச் செயலாளர் ஜெயராஜ், உத்தண்டிராயர், சேகர், கோட்டச் செயலாளர் சரவணன், நிர்வாகிகள் முருகன், பூமி உட்பட மாவட்டம் முழுவதிலுமிருந்து நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.